# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : தகவல் ஆணையங்கள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## தகவல் ஆணையங்கள் : (INFORMATION COMMISSIONS)

- 1923-ல் கொண்டுவரப்பட்ட ரகசிய பாதுகாப்புச் சட்டம் (OFFICIALS SECRETS ACT ) அரசு தகவல்களை மூடிமறைப்பதாக இருந்தது. -
- 2002 ல் சுதந்திர தகவல் சட்டம் (FREEDOM OF INFORMATION ACT) கொண்டுவரப்பட்டது.
- மத்திய மாநில அரசு அலுவலகங்கள் , பொதுத்துறை நிறுவனங்கள் , மத்திய மாநில அரசுகளிடம் உள்ள நிதித்துறை நிறுவனங்கள் , உள்ளாட்சி அமைப்புகள் , மத்திய மாநில அரசுகளிடம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சலுகை பெறும் அமைப்புகள் ஆகியவற்றின் ஒளிவு மறைவற்ற நம்பகமா ன வெளிப்படையான தகவல்களைப் பெற ஜூன் 22, 2005 ல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RIGHT TO INFORMATION ACT ) இயற்றப்பட்டது. இச்சட்டம் அக்டோபர் 12, 2005 ல் நடைமுறைக்கு வந்தது. ,
- இச்சட்டப்படி 2005-ல் மத்தியில் மத்திய தகவல் ஆணையமும் , மாநிலத்தில் மாநிலத் தகவல் ஆணையங்களும் ஏற்படுத்தப்பட்டன.
- தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ல் நடைமுறைக்கு வந்ததால் 2002-ல் கொண்டுவரப்பட்ட சுதந்திர தகவல் சட்டம் செயலிழந்தது.
- இவ்வாணையங்கள் மிக உயர்ந்த சுதந்திரமான தன்னிச்சையான (HIGH POWERED INDEPENDENT BODIES) அமைப்புகளாகும்.
- தகவல் என்பது பதிவேடுகள் , ஆவணங்கள், மின்னஞ்சல், ஆணைகள், ஒப்பந்தங்கள், எந்த ஒரு மின்னனு வடிவத்திலும் வைத்திருக்கும் தரவு பொருட்கள் (SOFTWARE) ஆகிய எந்த விதத்திலும் இருக்கலாம்.
- தகவல் கோருவதற்கான கட்டணம் 10
- ரூபாய். தகவல் கோரிய 30 நாட்களுக்குள் பொதுத்தகவல் அலுவலர் (PUBLIC INFORMATION OFFICER) தகவல் வழங்க வேண்டும்.
- கோரப்படும் தகவல் உயிர் (அ) தனிமனித சுத ந்திரம் தொடர்பானதாக இருந்தால் 48 மணிநேரத்திற்குள் வழங்க வேண்டும்.
- தகவல் அறியும் உரிமைச் சட்ட விதிகள் (RIGHT TO INFORMATION RULES) - 2012 இல் இயற்றப்பட்டது.

**மத்திய தகவல் ஆணையம் : (CENTRAL INFORMATION COMMISSION - CIC)**

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு-12 ன் கீழ் ஏற்படுத்தப்பட்டது. அமைவிடம் - டெல்லி.
- இவ்வாணையம் மத்திய பணியாளர் அமைச்சகத்தின் (MINISTRY OF PERSONNEL ) கீழ் இயக்குகிறது.
- மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிதித்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றின் தகவல் மனு மேல்முறையீடுகளை விசாரிக்கும்.
- இவ்வாணையம் CIVIL COURT-க்கு இணையான அதிகாரம் பெற்றது.
- தலைமை தகவல் ஆணையர் உட்பட 10 தகவல் ஆணையர்கள் வரை இருக்கலாம். ஆனால் தற்போது 1 தலைமை தகவல் ஆணையர் உட்பட 8 தகவல் ஆணையர்கள் உள்ளனர்.
- இவர்களை பிரதமர் தலைமையில் மக்களவை எதிர் க்கட்சி தலைவர் , பிரதமரால் நியமிக்கப்படும் கேபினட் அமைச்சர் ஆகியோர் அடங்கிய குழுவின் பரிந்துரைப்படி குடியரசு தலைவர் நியமிப்பார்.
- இவர்கள் பதவி விலகல் கடிதத்தை குடியரசு தலைவரிடம் அளிக்க வேண்டும்.

## மாநில தகவல் ஆணையம் (STATE INFORMATION COMMISSION - SIC)

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 15-ன்படி ஏற்படுத்தப்படும் (ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தாது).
- தமிழ்நாடு அரசு 2005ற்கு முன்பே இந்தியாவில் முதன்முதலில் 1997 மே-4-ல் தமிழ்நாடு தகவல் உரிமை சட்டத்தை இயற்றியுள்ளது.
- மாநில அரசு அலுவலகங்கள் , மாநில அரசின் கீழ் உள்ள பொதுத்துறை மற்றும் நிதித்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் தகவல் மனு மேல் முறையீடுகளை விசாரிக்கும்.
- இவ்வாணையம் Civil Court -க்கு இணையான அதிகாரம் பெற்றது.
- 1 தலைமை தகவல் ஆணையர் உள்பட 10 தகவல் ஆணையர் வரை இருக்கலாம்.

- தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் 1 தலைமை தகவல் ஆணையர் மற்றும் 2 தகவல் ஆணையர்களுடன் (07.10.2005 ல் ஏற்படுத்தப்பட்டது. )
- 2008 ல் தமிழ்நாட்டில் 1 தலைமை தகவல் ஆணையர் மற்றும் 6 தகவல் ஆணையர்களாக உயர்த்தப்பட்டது.
- தற்போது தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தில் 1 தலைமை தகவல் ஆணையர் மற்றும் 6 தகவல் ஆணையர்கள் உள்ளனர். )
- இவர்களை முதலமைச்சர் தலைமையில் சட்டப்பேரவை எதிர் க்கட்சி தலைவர் , முதலமைச்சரால் நியமிக்கப்படும் கேபினட் அமைச்சர் ஆகியோர் அடங்கிய குழுவின் பரிந்துரைப்படி ஆளுநர் நியமிப்பார்.
- பதவிகாலம் : 5 ஆண்டுகள் (அ) 65 வயது வரை.
- இவர்களை தவறான நடத்தை (MISBEHAVIOUR) ( அ) தகுதியின்மை (INCAPACITY) காரணங்களுக்காக உச்நீதிமன்றம் விசாரித்து அளிக்கும் அறிக்கைப்படி ஆளுநர் பதவி நீக்கம் செய்வார் . நொடிப்பு நிலை அடைதல் , குற்றச் செயலில் ஈடுபடுதல் , அனுமதியின்றி வேறு ப தவி வகித்தல் ), பணியின் போது பணி செய்வதற்காக நிதி அல்லது வேறுபலன்களை பெறுதல் ஆகிய காரணங்களுக்காகவும் , ஆளுநரால் பதவி நீக்கம் செய்யப்படுவர்.
- இவர்கள் பொதுவாழ்வில் உயர்ந்த நபர்களாகவும் , பொதுப்பணி, சட்டம், அறிவியல் தொழில்நுட்பம், சமூகப்பணி, மேலாண்மை, இதழியல், நிர்வாகம் (அ) ஆட்சித்துறை ஆகிய ஏதாவது ஒரு துறையில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும்.
- தலைமை தகவல் ஆணையர் மாநில தேர்தல் ஆணையருக் கு இணையாகவும், தகவல் ஆணையர்கள் மாநில தலைமைச்செய லாளருக்கு இணையாகவும் அதிகாரம் மற்றும் சம்பளம் பெறுவர்.